# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

<u>ஆணை நாள் 08.05.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 12204/B/2024</u>**

திரு.ஜெ.புகழ்பாலன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
ஆராய்ச்சி அலுவலர்,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி,
எழும்பூர், சென்னை - 600008. — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

1. இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (08.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.ஜெ.புகழ்பாலன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.அ.செந்தில்நாதன், பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர் (நிலை-பி), தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 18.09.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 16.07.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேல்மானப்பாக்கம் கிராமம் சர்வே எண்.18, 18/5, 39, 93, 96, 125, 179-ல் 1893-ம் வருடத்தின் ஆரம்ப நில அளவை அசல் பதிவேடு நகல்கள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 6 இனங்களில் தாக்கல் செய்த மனு மற்றும் 27.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, அவற்றை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் தனது சட்டப்பிரிவு 6(1) மனுவில் செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேல்மணப்பாக்கம் கிராமத்தின் சில சர்வே எண்களில் 1893-ம் வருட ஆரம்ப நில அளவை அசல் பதிவேடு, கிராம வரைபடங்கள், 1893-ம் வருடத்திற்கு முந்தைய இனாம் நில விவரங்கள், கோப்புகள், தொகுப்புகள், குறிப்புரைகள், இனாம் உத்தரவுகள், 1865 முதல் 1910 வரை உள்ள இறப்பு பதிவேடு மற்றும் பாலூர்-ஆ மற்றும் பாலூர்-இ ஆரம்ப நில அளவை அசல் பதிவு, 1765 முதல் 1864 வரை சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட நில பதிவு ஆவண விவரம், பத்திர பதிவுகள் கோரப்பட்டதில, கோரிய தகவவில் புலப்படம் மட்டுமே தங்கள் அலுவலகத்தில் பராமரிப்பில் உள்ளது என்றும், மேல்மணப்பாக்கம் கிராமத்திற்கு ஆரம்ப நில அளவை புலப்படம் தங்கள் அலுவலக பராமரிப்பில் இல்லை என்றும், பிற தகவல் குறித்த மேல்நடவக்கைக்காக சென்னை, நில அளவை, நில வரித்திட்ட இயக்ககம், சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் மனுவின் நகல் அனுப்பப்பட்டு, மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டதாக எடுத்துரைத்து, 01.08.2024, 10.01.2025, 18.02.2025 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டதாக தகவல்களை தெரிவித்து, ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவேண்டியுள்ளதை இவ்வாணையம் அறியமுடிகிறது.

6. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களில், தனக்கு தேவையான புல எண்ணின் மாவட்டம், வட்டம், கிராமம் மற்றும் பைமாஸ் எண் குறிப்பிட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் தெரிவித்து, தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களை தகவலாக பெற்றுக்கொள்ள இவ்வாணையத்தால் அறிவுறுத்தப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள், மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகத்திற்கு நேரில் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 16.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுக்களில் கோரியுள்ள தகவல்களில் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும் பட்சத்தில் மனுதாரரிடமிருந்து முதல் 25 பக்கங்களுக்கு கட்டணமின்றியும், 25 பக்கங்களுக்கு மிகைப்படும் ஆவணங்களுக்குரிய கட்டணத்தை செலுத்தக் கோரி, அவரால் கோரப்படும் ஆவணங்களை ஒளிநகலெடுத்து, சான்றொப்பமிட்டு, மனுதாருக்கு வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ மற்றும் புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அவர்கள் 12.06.2026-க்குள் பதிவு தபால் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
2. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மேற்படி பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தன்படி, தகவல் வழங்க கோரி மனுதாரரின் மனுவை மாற்றம் செய்த அலுவலகங்களிலிருந்து தகவல்களை பெற்று மனுதாரருக்கு***

*சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, சான்றொப்பமிட்டு, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் மனுதாரருக்கு அனுப்பி அதன் நகலையும், மனுதாரர் தகவலை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி அவர்கள் 12.06.2026-க்குள் பதிவு தபால் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.*

3. *மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவு 1,2-இன்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

சட்டம் 2005
அறியும் உரிமை

**<u>வழக்கு எண். SA 12204/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
ஆராய்ச்சி அலுவலர்,
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி,
எழும்பூர், சென்னை - 600008.

**<u>மனுதாரர்:</u>**

திரு.ஜெ.புகழ்பாலன்,
எண்.7, கரிகாலன்,
2வது குறுக்கு தெரு,
பதுவஞ்சேரி, மாடம்பாக்கம்,
சென்னை - 600126.

Copy to: File
AK/PC